## <u>தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தூத்துக்குடி</u>

## <u>அறிவிப்பு</u>

**நாள் : 06.06.2019**

தூத்துக்குடி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் 05.09.2017 அன்று தினமலர் மற்றும் தினகரன் நாளிதழ்களில் வெளியிடப்பட்ட வேலைவாய்ப்பு அறிவிப்பின் அடிப்படையில் 25 (இருபத்து ஐந்து) **அலுவலக உதவியாளர்** பணிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட / நிராகரிக்கப்பட்ட பட்டியல் இந்நீதிமன்ற வலைதளத்தில் வெளியிடப்பட்டது. தற்போது மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிட்ட தேதி மற்றும் இடத்தில் நடைபெறும் எழுத்துத் தேர்வில் தவறாமல் கலந்து கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற (ROC No : 58552-A/2017/C3 dated 04.08.2017) வழிகாட்டுதலின்படி 07.06.2019, 10.06.2019, 11.06.2019 ஆகிய தேதிகளில் தவறுகளை திருத்திக்கொள்ள பிற்பகல் 5.30 மணிவரை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 11.06.2019 அன்று பிற்பகல் 5.30 மணிக்கு மேல் வருகை தரும் நபர்களுக்கு அளிக்கப்படமாட்டாது. அவ்வாறு நிராகரிக்கப்பட்டவர்களின் விண்ணப்பங்கள் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அந்த விண்ணப்பதாரர்களின் பட்டியல் 11.06.2019 அன்று பிற்பகல் 06.00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் வெளியிடப்படும் என இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் அனைத்து தகவல்களும் இம்மாவட்ட நீதிமன்ற வலைதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்பதை தெரிவிக்கப்படுகிறது.

| விண்ணப்ப எண் | தேர்வுக்கான தேதி | தேர்வு நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1 முதல் 3470 வரை | 22.06.2019 பிற்பகல் 2.30 to 4.30 | காரப்பேட்டை நாடார் மேல்நிலைப்பள்ளி, 329, தெற்கு காட்டன் ரோடு, சிஜிஇ காலணி, தூத்துக்குடி . 628001. |
| 1 முதல் 86 வரை (வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம்) | 22.06.2019 பிற்பகல் 2.30 to 4.30 | காரப்பேட்டை நாடார் மேல்நிலைப்பள்ளி, 329, தெற்கு காட்டன் ரோடு, சிஜிஇ காலணி, தூத்துக்குடி . 628001. |

ஒம்/-த.பகவதியம்மாள்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தூத்துக்குடி.